[1978 ஏப்ரல் 7

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, நான் ஒரு முக்கியமான பிரச்னை பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன், உடனயாக அதைப்பற்றி நான் பேச விரும்புகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: மாலை வைத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாலையோ, நாளையோ இல்லை. இனி அதற்கு நேரம் இல்லை. எல்லாவற்றையும் இன்றைக்கே முடித்தாகவேண்டும். அதுவும் 1½ மணிக்குள் முடித்தாகவேண்டும். ஆகவே, அதற்கெல்லாம் பதில் அனுப்பி விடுகிறேன்.

[முற்பகல் 11-30]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்த அறிக்கைகளும் மிகவும் நீண்டதாக இருக்கின்றன. பொதுவான பிரச்னை என்னவென்றால் 41 ஆவது விதியின்கீழ் வரும்போது படித்தால் பலருக்கு பயனுடையதாக இருக்கும். என்னைப் பொறுத்தவரையில் புதுக்கோட்டையில் ஒரு தனியார் வெடிக்கிடங்கில் ஏற்பட்ட விபத்து பற்றியது. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்றத்தில் எழுப்பினர் என்று தெரிந்தாலே தொகுதி மக்கள் ஆறுதலடைவார்கள். அதுமட்டுமல்ல; விவரங்களைத் தனியாக அனுப்பித் தருகிறோம். இன்னும் இரண்டு மணி நேரத்திற்குள் நம்முடைய அலுவல்களை முடித்துக்கொள்ள வேண்டியிருப்பதால், இஸ்மாயில் கமிஷன் அறிக்கையில் பலர் பேசவேண்டியிருப்பதால் பேரவைத் தலைவரவர்கள் என்னுடைய தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் பெயரில் உள்ள கவன ஈர்ப்புத் தீர்மானத்தை மட்டும் படித்துவிட்டால் போதும்; பதில் அவர்களுக்கு வந்து சேரும்.

அரசினர் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(9) கவன ஈர்ப்பு.

(அ) புதுக்கோட்டை, தெற்கு ராஜ வீதியில் உள்ள கடையில் ஏற்பட்ட வெடி விபத்தும், அதனல் ஏற்பட்ட பலர் உயிரிழப்பும் குறித்து.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, புதுக்கோட்டை நகரில் 5-2-78ஆம் தேதியன்று தெற்கு ராஜ வீதியில் உள்ள கடையில் ஏற்பட்ட வெடி விபத்தினல் 15—க்கும் மேற்பட்டோர்

உயிரிழக்கவும் மேலும் பலரின் நிலைமை கவலைக்கிடமாகவும் இருக்கின்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, புதுக்கோட்டை நகரில் கடந்த 5-2-1978 ஞாயிற்றுக்கிழமை தெற்கு ராஜ வீதியில் உள்ள கடையில் ஏற்பட்ட வெடி தீ, விபத்தினால் 15-க்கும் மேற்பட்டோர் உயிரிழக்கவும், மேலும் பலரின் நிலைமைக் கவலைக்கிடமாக இருக்கின்ற நிலையைப் பற்றி விவாதிக்க.

புதுக்கோட்டை மூன்றாவது தெற்கு தெருவில் உள்ள திரு. முகமது சுல்தான் ராவுத்தர் கடையில் 5-2-78 அன்று பகல் 12-25 மணி அளவில் தீப் பிடித்துக் கொண்டது. வெடி விபத்திற்கான காரணம் பற்றி புலன் விசாரிக்கப்பட்டு வருகிறது. காவல் படையினரும் தீயணைப்புப் படையினரும் விபத்து நடக்கும் இடத்தை அடைவதற்கு முன்பே, கடையில் வைத்திருந்த பொருட்கள் வெடிக்கத் தொடங்கிவிட்டது. அதன் காரணமாக சம்பவம் நடந்த அந்த வீதி வழியாகச் சென்ற 6 பெண்கள், 3 குழந்தைகள் உட்பட 41 பேர் காயமடைந்தனர். இவர்களுக்கு புதுக்கோட்டை மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. 39 பேர் உள் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் 13-2-78 வரை 14 பேர்கள் இறந்து விட்டனர் (பெயர் விவரம் இணைப்பில் உள்ளது). ரூ. 25,000 மதிப்புள்ள பொருட்கள் சேதமடைந்து விட்டது. தீயணைப்புப் படையினர் 3 மணி 40 நிமிஷங்கள் போராடி சுமார் மாலை 4—00 மணி அளவில் தீயை அணைத்தனர்.

கடைக்காரர், சில்லரையாக ஸ்பிரிட் விற்க ''டி.எல்.4'' உரிமம் பெற்றிருந்தார். அவர் செய்த சில தவறுகள் காரணமாக அவருடைய உரிமம் 31-10-77-க்குப் பிறகு புதுப்பிக்கப்படாமல் ரத்து செய்யப்பட்டுவிட்டது; கடைக்காரருக்கு 31—3—78 வரை பட்டாசு வைத்து விற்க அனுமதியுள்ள ''கே'' பாரம் உரிமம் இருந்தது.

காவல் துறையினர் புலன் விசாரணையில் கிடைத்த தகவல்களின் பேரில் உடனடியாக இரண்டாவது தெற்குத் தெருவில் இருக்கும் கடைக்காரரின் வீட்டில் 8 மூட்டை பொட்டாசியம் நைட்ரேட், 2 மூட்டை அமோபஸ் மஞ்சள் கந்தகம் ஆகியவற்றை கைப்பற்றினர். இது பாறைகளை பிளப்பதற்கான வெடிகள் செய்ய உபயோகப் படுத்தப் பட்டிருக்கும் என சந்தேகம் உள்ளது. இது சம்பந்தப்பட்ட 35 பொருட்களும், தளவாடங்களும் கைப் பற்றப் பட்டுள்ளது. கடைக்காரர் கைது செய்யப்பட்டுள்ளார். அவருடைய மூன்று மகன்களும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்

பட்டுள்ளனர். புதுக்கோட்டை காவல் நிலையத்தில் இந்திய தண்டனை விதிகள் 436, 286 மற்றும் 304(A) கீழ் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது,

4, சென்னை தெற்கு வட்டத்தைச் சேர்ந்த துணை வெடிக் கட்டுப் பாட்டு அலுவலர் 7-2-78 அன்று சம்பவம் நடந்த இடத்திற்கு வந்து பார்த்தார். விபத்தில் சம்பந்தப்பட்ட பொருட்களின் மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதனைக்காக ஆய்வு கூடத்திற்கு அனுப்பப் பட்டுள்ளது. வெடிகள் கட்டுப்பாட்டு அலுவலர் 16-2-78 அன்று சம்புவம் நடந்த இடத்தைப் பார்த்தார். மாவட்ட வருவாய்த் துறை அலுவலர் இந்திய வெடிகள் சட்டம், 1884 (Indian Explosives Act, 1884) கீழ், வெடி விபத்துப் பற்றி விசாரணையை 11-4-78 அன்று நடத்துகிறுர்.

5. இறந்து போனவர்களில், 6 பேருடைய குடும்பம் இறுதி சடங்கு செய்யக் கூட வசதியில்லாதவர்கள். ஆகவே, மாவட்ட ஆட்சியாளர், அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 100 மானிய மாக அளித்துள்ளார். விபத்தில் சம்பந்தப் பட்டவர்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து உதவி செய்வது பற்றி மாவட்ட ஆட்சியாளர் தனது பரிந்துரைகளை அரசுக்கு அனுப்பியுள்ளார். இவை அரசின் பரிசிலனையில் உள்ளன.

5—2—78 அன்று நடந்த வெடி விபத்தில்

காயமடைந்தவர்கள்—இறந்தவர்கள் பெயர் விவரம்.

காயமடைந்தவர்கள்.

1. அ. அக்பர், புதுக்கோட்டை.
2. சேகர், புதுக்கோட்டை.
3. முகம்மது கனி, புதுக்கோட்டை.
4. கிருஷ்ணன், பெருன்சின்னே.
5. ஜயபிரகாஷ், புதுக்கோட்டை,
6. மாணிக்கம், பெருமனடு.
7 கணேசன், புதுக்கோட்டை.
8. முகம்மது இப்ரஹிம், புதுமனைக்கட்டு.
9. ஹபிபுல்லா, புதுக்கோட்டை.
10. பாபு, புதுக்கோட்டை.
11. சுந்தரேசன், புதுக்கோட்டை
12. தங்கவேலு, புதுக்கோட்டை
13. இப்ரஹிம், புதுக்கோட்டை

14. ந. ஹுசேன் புதுக்கோட்டை
15. செல்லம்மாள் (குழந்தை) தும்மனகுடி.
16. ஜாகிர் ஹுசேன், புதுக்கோட்டை.
17. மரிய லுக்காஸ் மேரி, புதுக்கோட்டை.
18. சின்னத்தாள், புதுக்கோட்டை.
19. மீனுட்சி, திருவரன்குளம் அஞ்சல்.
20. புஷ்பம், புதுக்கோட்டை.
21. காசி, புதுக்கோட்டை.
22. சிங்காரம், நச்சாந்துபட்டி.
23. சாகுல் அமீத், புதுக்கோட்டை.
24. விஸ்வநாதன், புதுக்கோட்டை.
25. சுப்பையா, புதுக்கோட்டை.
26. செல்வராஜ், நச்சாந்துபட்டி.
27. முகம்மது இஸ்மாயில், புதுக்கோட்டை.

இறந்தவர்கள்.

1. முத்துகருப்பண்ணன், முள்ளூர்.
2. செந்தில், காரைக்குடி.
3. கணேசன், கரம்பகுடி வட்டம்.
4. வீரன், ஆண்டகுளம் அஞ்சல்.
5. சேவகன், அருங்கல்.
6. ரவிசந்திரன், புதுக்கோட்டை.
7. ரகமத்துல்லா, புதுக்கோட்டை.
8. ஹரிஹரன், புதுக்கோட்டை.
9. துரைராஜ், புதுக்கோட்டை.
10. கருணுகரன், புதுக்கோட்டை.
11. சந்திரசேகரன், புதுக்கோட்டை.
12. வாசு தேவன், புதுக்கோட்டை.
13. அழகன் திருமயம்.
14. குமார், புதுக்கோட்டை.